## களம் தேர்வு – 10

1. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்ந்து விடையளி

கூற்று 1 : உருசிய நாட்டில் அணு துளைக்காத கிரெம்ளின் மாளிகையில் உள்ள சுரங்கப் பாதுகாப்புப் பெட்டகத்தில் திருக்குறளும் இடம் பெற்றுள்ளது

கூற்று 2: வீரமாமுனிவர் திருக்குறளை இலத்தீனில் மொழிபெயர்த்தார்

கூற்று 3: ஜி.யு.போப் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்

கூற்று 4: அயர்லாந்து நாட்டிலுள்ள அருங்காட்சியகத்தில் திருக்குறள், விவிலியத்துடன் வைக்கப்பட்டுள்ளது.

(A) கூற்று 2 தவறு (B) கூற்று 3 தவறு (C) கூற்று 4 தவறு (D) கூற்று 1 தவறு

2. 'உயில்' என்பதன் தமிழாக்கம்

(A) சொத்து (B) இறுதிநிலை (C) ஆவணம் (D) இறுதிமுறி

3. ஜி.யு.போப் 1858 ஆம் ஆண்டு பள்ளி ஒன்றைத் தொடங்கி அதன் ஆசிரியராக பணியாற்றிய இடம்

(A) உதகமண்டலம் (B) சாயர்புரம் (C) சாந்தோம் (D) தஞ்சாவூர்

4. பொருத்துக (ஜி.யு.போப்)

| | | | | a | b | c | d | e | f |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| a) பிறப்பு | - | 1) 1839 | (A) | 3 | 1 | 7 | 6 | 5 | 2 |
| b) தமிழக வருகை | - | 2) 1908 | (B) | 3 | 1 | 5 | 6 | 4 | 2 |
| c) திருநெல்வேலி | - | 3) 1820 | (C) | 3 | 1 | 7 | 6 | 4 | 2 |
| d) திருமணம் | - | 4) 1885 | (D) | 3 | 1 | 5 | 4 | 6 | 2 |
| e) தாயகம் திரும்புதல் | - | 5) 1855 | | | | | | | |
| f) இறப்பு | - | 6) 1850 | | | | | | | |
| | - | 7) 1842 | | | | | | | |

5. கூற்று 1: ஜி.யு.போப் திருக்குறளை மொழிபெயர்த்த ஆண்டு - 1886

கூற்று 2: ஜி.யு.போப் திருவாசகத்தை மொழி பெயர்த்த ஆண்டு - 1900

(A) 1, 2 சரி (B) 1 சரி / 2 தவறு (C) 1, 2 தவறு (D) 1 தவறு / 2 சரி

6. ஜி.யு.போப் மொழிபெயர்த்த நூல்களில் தவறானது எது?

1. திருக்குறள் 2. திருவாசகம் 3. புறப்பொருள் வெண்பாமாலை

4. புறநானூறு 5. திருவருட்பயன்

(A) 4 மட்டும் (B) 3 மட்டும் (C) 5 மட்டும் (D) எதுவுமில்லை

7. இந்தியன் சஞ்சிகை, இந்தியாவின் தொல்பொருள் ஆய்வு முதலான ஏடுகளில் தமிழ்மொழி பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகளை ஜி.யு.போப் எம்மொழியில் எழுதினார்?

(A) ஆங்கிலம் (B) தமிழ் (C) வடமொழி (D) இலத்தின்

8. பொருந்தாததைத் தேர்க

(A) காவலூர் கலம்பகம் (B) தமிழ்ச் செய்யுட் கலம்பகம்

(C) தொன்னூல் விளக்கம் (D) பரமார்த்தகுரு கதை

9. வீரமாமுனிவர் எந்த வயதில் சமயப்பணியாற்ற தமிழகம் வந்தார்?

(A) 14 (B) 19 (C) 24 (D) 30

10. சதுரகராதியை வெளியிட்டவர் யார்?

(A) மஸ்தான் சாகிபு (B) தைரியநாதர் (C) ஆறுமுகநாவலர் (D) ஜி.யு.போப்

11. வல்லின உகரங்கள் ஆறும் தனிக்குறிலை அடுத்தும், பல எழுத்துகளை அடுத்தும் வருவது எவ்வாறு அழைக்கப்படும்?

(A) குற்றியலுகரம் (B) குற்றியலிகரம் (C) முற்றியலுகரம் (D) A (ம) C

12. கூற்று 1: நெடில் தொடர்க் குற்றியலுகரம் மட்டுமே இரண்டு எழுத்துகளைப் பெற்று வரும்

கூற்று 2: உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்கள் மட்டுமே இரண்டிற்கு மேற்பட்ட எழுத்துகளைப் பெற்று வரும்

கூற்று 3: இடையின மெய்யைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் இடைத்தொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

(A) கூற்று 1 தவறு (B) கூற்று 2 தவறு (C) கூற்று 3 தவறு (D) அனைத்தும் சரி

13. பொருந்தாததைத் தேர்ந்தெடு

(A) பொறு (B) சேறு (C) சோறு (D) மாறு

14. வேறுபட்டதைத் தேர்க

(A) மது (B) உயர்வு (C) கேது (D) செறு

15. செயப்பாட்டுவினையை செய்வினையாக மாற்றும் கருத்துகளில் முறையற்றது எது?

1. எழுவாயுடன் 'ஐ' என்ற வேற்றுமை உருபைச் சேர்த்துச் செயப்படுபொருளாக மாற்ற வேண்டும்

2. எழுவாயைச் செயப்படுபொருளாக மாற்ற வேண்டும். அதனுடன் 'ஆல்' என்ற மூன்றாம் வேற்றுமை உருபைச் சேர்க்க வேண்டும்.

3. செயப்படுபொருளோடு இணைந்துள்ள 'ஆல்' என்ற மூன்றாம் வேற்றுமை உருபை நீக்கி எழுவாயாக மாற்ற வேண்டும்

4. செயப்படுபொருளோடு இணைந்துள்ள 'ஐ' என்ற இரண்டாம் வேற்றுமை உருபை நீக்கி எழுவாயாக மாற்ற வேண்டும்.

5. பயனிலையுடன் இணைந்துள்ள படு, பட்டது என்னும் துணைவினைகளை நீக்க வேண்டும்

6. பயனிலையுடன் படு, பட்டது என்னும் துணைவினைகளைச் சேர்க்க வேண்டும்

(A) 1, 4, 2 சரி / 3, 5, 6 தவறு (B) 1, 2, 3 சரி / 4, 5, 6 தவறு

(C) 2, 4, 6 சரி / 1, 3, 5 தவறு (D) 1, 3, 5 சரி / 2, 4, 6 தவறு

16. அ) செய்வினை

1) ஆசிரியர் பாடத்தை நடத்தினார்

2) கபிலர் குறிஞ்சிக்கலியை இயற்றினார்

ஆ) செயப்பாட்டு வினை

1) பாரி கபிலரால் போற்றப்பட்டார்

2) கலையரசி துணியைத் தைத்தாள்

(A) அ) 1, 2 சரி / ஆ) 1, 2 தவறு (B) அ) 1 சரி, 2 தவறு / ஆ) 1 தவறு, 2 சரி

(C) அ) 1, 2 சரி / ஆ) 1 சரி 2 தவறு (D) அ) 1, 2 சரி / ஆ) 1 தவறு, 2 சரி

17. எவ்வகை வினை என காண்க

ஓவியம் மாறனால் வரையப்பட்டது

(A) தன்வினை (B) பிறவினை (C) செய்வினை (D) செயப்பாட்டுவினை

18. விழைவுத் தொடரின் பொருள்களில் பொருந்தாதது எது?

1. வாழ்த்தல் 2. விதித்தல் 3. வேண்டல் 4. வைதல்

(A) 2 மட்டும் (B) 3 மட்டும் (C) 4 மட்டும் (D) எதுவுமில்லை

19. கூற்று 1: தென்னை மரத்துக்குக் கிளைகள் இல்லை – எதிர்மறைத் தொடர்

கூற்று 2: இளமையில் கல் – கட்டளைத் தொடர்

(A) கூற்று 1, 2 சரி (B) கூற்று 1 சரி / 2 தவறு (C) கூற்று 1, 2 தவறு (D) கூற்று 1 தவறு / 2 சரி

20. தவறாக குறிக்கப்பட்ட தொடர் எது / எவை?

1. சிறந்த நூல்களை அரங்கேற்றுதல் பண்டைக்கால வழக்கம் – செய்தித்தொடர்

2. உழைத்துப் பிழை – விழைவுத் தொடர்

3. மாமல்லபுரத்துச் சிற்பங்கள் மிகவும் அழகாக உள்ளன – உணர்ச்சித் தொடர்

4. மணிமொழி நன்கு பாடினாள் – உடன்பாட்டுத் தொடர்

5. நினைவாற்றலை வளர்த்துக் கொள்க – செய்தித் தொடர்

(A) 2 மட்டும் (B) 4 மட்டும் (C) 5 மட்டும் (D) 3 மட்டும்

21. ‘மணிமேகலை வெண்பா’ என்ற நூலின் ஆசிரியர் யார்?

(A) வீரமாமுனிவர் (B) ஜி.யு.போப் (C) பாரதிதாசன் (D) இராமலிங்கம்

22. சரளமாக – என்ற பிறமொழிச் சொல்லிற்கு இணையான தமிழ்ச்சொல்லைக் காண்க

(A) எளிமையாக (B) தங்கு தடையின்றி (C) வேகமாக (D) விரிவாக

23. பொருத்துக

| | | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|---|
| a) கழறும் | - | 1) மயக்கம் | | (A) | 1 | 2 | 3 | 4 |
| b) மயரி | - | 2) வஞ்சகர் | | (B) | 4 | 2 | 1 | 3 |
| c) சலவர் | - | 3) குழந்தை | | (C) | 2 | 4 | 1 | 3 |
| d) குழவி | - | 4) பேசும் | | (D) | 4 | 1 | 2 | 3 |

24. இனியவை நாற்பது கூறும் இனிய பண்புகளில் பொருந்தாதது எது?

1. அறிவுடையாரின் வாய்ச்சொற்களைப் பின்பற்றி ஒழுகுதல் இனிது

2. உலக உயிர்களுக்கெல்லாம் உரிமைப்பட வாழ்தல் இனிது

3. வஞ்சகரைச் சேராமல் விலகியிருத்தல் இனிது

4. அவைக்கு அஞ்சாமல் பேசுபவரின் வீரம் இனிது

(A) 1 மட்டும் (B) 2 மட்டும் (C) 3 மட்டும் (D) 4 மட்டும்

25. சேர்த்து எழுதுக - மயரிகள்+அல்லராய்

(A) மயரிகளாய் (B) மயரிகளல்ளராய் (C) மயரிகலல்லராய் (D) மயரிகளல்லராய்

26. குவை - என்பதன் சரியான பொருளறிக

(A) குவியல் (B) குவளை (C) மரம் (D) மலை

27. பொருந்தாத இணைகள் எத்தனை என காண்க

1. Folio Number - இதழ் எண்

2. Green Proof - திருத்தப்படாத அச்சுப்படி

3.Bulletion - சிறப்புச் செய்தி இதழ்

4. Flash News – தலைப்புச் செய்தி

5.Editorial - தலையங்கம்

(A) 1 இணை (B) 2 இணை (C) 3 இணை (D) 4 இணை

28. காரிருள் அகத்தில் நல்ல கதிரொளி நீதான்! இந்த

பாரிடைத் துயில்வோர் கண்ணிற் பாய்ந்திடும் எழுச்சி நீதான் - இப்பாடலின் ஆசிரியர் யார்?

(A) தாராபாரதி (B) கண்ணதாசன் (C) பாரதிதாசன் (D) இராமலிங்கனார்

29. பொருந்தாதது எது?

(A) பூஜை (B) ரோஜா (C) விஷம் (D) அலங்காரம்

30. பொருந்தாத இணைகள் எத்தனை எனக் காண்க

1. பீலி - மயில் தோகை

2. உகிர் - நகம்

3. ஆழி - சக்கரம்

4. எயிறு - பல்

5. வேய் - மூங்கில்

6. நல்குரவு - வரவேற்பு

7. வினவினான் - சொன்னான்

(A) 2 இணை (B) 1 இணை (C) 4 இணை (D) 3 இணை

31. பொருத்தமற்றது எது?

(A) பண்டிகை (B) வேடிக்கை (C) வணிகம் (D) வெள்ளம்

32. பொருத்துக

a) பெயர் இயற்சொல் - 1) நோக்கினார்

b) வினை இயற்சொல் - 2) மாநகர்

c) இடை இயற்சொல் - 3) பலகை

d) உரி இயற்சொல் - 4) மற்றொருவர்

- 5) தூங்கினார்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 3 | 2 |
| (B) | 4 | 5 | 3 | 2 |
| (C) | 3 | 5 | 4 | 2 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

33. கூற்று 1: இனியவை நாற்பது நூலின் ஆசிரியர் - பூதஞ்சேந்தனார்

கூற்று 2: இவரின் காலம் கி.மு.இரண்டாம் நூற்றாண்டு

(A) 1, 2 சரி (B) 1 சரி / 2 தவறு (C) 1 தவறு / 2 சரி (D) 1, 2 தவறு

34. கூற்று 1: அமர் என்பதன் பொருள் - விருப்பம்

கூற்று 2: தொண்ணூற்றாறு என்பதை - தொண்ணூற்று + ஆறு என பிரிக்க வேண்டும்

(A) 1, 2 சரி (B) 1 சரி / 2 தவறு (C) 1 தவறு / 2 சரி (D) 1, 2 தவறு

35. நேர்கூற்று அயற்கூற்றாக மாற்றப்படும் போது அதில் இடம் பெற்ற 'தன்மை' எவ்வாறு மாறும்?

(A) தன்மை (B) முன்னிலை (C) படர்க்கை (D) B மற்றும் C

36. நேர்கூற்று அயற்கூற்றாக மாற்றப்படும் போது கடைபிடிக்க வேண்டிய முறைகளில் பொருந்தாதது எது?

1. மேற்கோள், காற்புள்ளி இவற்றை எடுத்துவிட வேண்டும்

2. என்று, என என்ற செய்தியை முடிக்கும் சொல்லை நீக்க வேண்டும்

3. கட்டளைச் சொல்லோடு ஆறு, ஆக எனும் சொல்லைச் சேர்க்க வேண்டும்

(A) 1 மட்டும் (B) 2 மட்டும் (C) 3 மட்டும் (D) எதுவுமில்லை

37. தவறானது எது?

| | நேர்கூற்று | | அயற்கூற்று |
|---|---|---|---|
| 1. | நாம் | - | தாம் |
| 2. | நாங்கள் | - | தாங்கள் |
| 3. | நான் | - | தான் |
| 4. | நீ | - | நான் |
| 5. | நீங்கள் | - | நாங்கள் |
| 6. | இவை | - | அவை |

(A) 1, 3 (B) 4, 5 (C) 2, 6 (D) 3, 5

38. பொருத்துக

| | | | | | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| a) கள் | - | 1) எருமை | | (A) | 2 | 1 | 5 | 3 | 6 |
| b) கடா | - | 2) தேன் | | (B) | 1 | 2 | 6 | 5 | 4 |
| c) வள்ளை | - | 3) தீவினை | | (C) | 2 | 1 | 5 | 6 | 4 |
| d) சூழ்விதி | - | 4) வென்றான் | | (D) | 2 | 1 | 5 | 3 | 4 |
| e) செற்றான் | - | 5) நீர்க்கொடி | | | | | | | |
| | - | 6) நல்வினை | | | | | | | |

39. 'குட்டி' என்னும் இளமைப் பெயரில் தவறானது எது / எவை?

1. கழுதை 2. பன்றி 3. எலி 4. ஆடு

5. குரங்கு 6. நாய் 7. குதிரை

(A) 3, 5 மட்டும் (B) 7 மட்டும் (C) 1, 3 மட்டும் (D) எதுவுமில்லை

40. சரியான வினைமரபைத் தேர்க

கவிதை --------

(A) எழுது (B) தீட்டு (C) இயற்று (D) புனை

41. பொருத்துக

| | | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|---|
| a) வழக்கு | - | 1) அழிவது | | (A) | 2 | 1 | 4 | 3 |
| b) ஆன்ற | - | 2) நன்னெறி | | (B) | 3 | 4 | 1 | 2 |
| c) நயன் | - | 3) உயர்ந்த | | (C) | 4 | 1 | 2 | 3 |
| d) மாய்வது | - | 4) நேர்மை | | (D) | 4 | 3 | 2 | 1 |

42. பண்பிலாதவன் பெற்ற பெருஞ்செல்வமானது -------- போன்றது என வள்ளுவர் குறிப்பிடுகிறார்

(A) ஊர் நடுவே பழுத்த பழங்களை கொண்ட மரம் போன்றது

(B) மிகப்பெரிய இவ்வுலகம் பகலிலும் இருளாகவே தோன்றுவது போன்றது

(C) நன்னெறியை அடையும் எளிமையான வழியை தருவது

(D) பாத்திரத்தின் தன்மையால் நல்ல பால் திரிந்தது போன்றது

43. பிரித்து எழுதுக 'திருவருட்பா'

(A) திரு+வருள்+பா (B) திரு+வருட்பா (C) திரு+அருள்பா (D) திரு+அருள்+பா

44. வல்லினம் மிகும் இடங்களில் பொருந்தாததைத் தேர்க

(A) அந்த, இந்த என்னும் சுட்டுத்திரிபுகளின் பின் வல்லினம் மிகும்

(B) இனி, தனி, மற்று, மற்றை என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகும்

(C) இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையின் பின் வல்லினம் மிகும்

(D) வினைத்தொகையில் வல்லினம் மிகும்

45. பிழையற்றத் தொடரைத் தேர்க

(A) வெள்ளிக் கிண்ணம் விலையதிகம்

(B) இந்த செயலை எப்படி செய்தாய்?

(C) உறுதியாக செய்வேன் என்று வாக்கு கொடுத்தேன்

(D) நாடகம் என்பது உலக நிகழ்ச்சிகளை காட்டும் கண்ணாடி

46. பொருத்துக

| | | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|---|
| a) துழாய் அலங்கல் | - | 1) சந்தனம் | | (A) | 2 | 1 | 4 | 3 |
| b) களபம் | - | 2) துளசி மாலை | | (B) | 4 | 3 | 1 | 2 |
| c) ஊன் | - | 3) அம்பு | | (C) | 3 | 4 | 2 | 1 |
| d) பகழி | - | 4) தசை | | (D) | 2 | 4 | 1 | 3 |

47. தவறான சொல்லையும் பொருளையும் தேர்க

(A) புயம் - ஆறு (B) நாமம் - பெயர்

(C) இருநிலம் - பெரிய உலகம் (D) தைவந்து - தொட்டுத் தடவி

48. 'மீசைக்கும் கூழுக்கும் ஆசைப்பட்டு

மேல் விழுந்து பாடுபவன் கவிஞன் அல்லன்' என்று பாடியவர்?

(A) கண்ணதாசன் (B) பாரதிதாசன் (C) முடியரசன் (D) வாணிதாசன்

49. கூற்றுகளை ஆராய்க (முடியரசன்)

1. முடியரசனின் இயற்பெயர் முத்தையா என்கிற முடியரசு ஆகும்

2. காரைக்குடி மீ.சு.உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார்.

3. பாரதிதாசன் பரம்பரைத் தலைமுறைக் கவிஞருள் மூத்தவராவார்

4. பறம்புமலையில் நடந்த விழாவில் கவியரசு என்னும் பட்டம் மதுரை ஆதினம் அவர்களால் வழங்கப்பட்டது

(A) 1, 2 சரி / 3, 4 தவறு (B) 2, 3, 4 சரி / 1 தவறு

(C) 2, 3 சரி / 1, 4 தவறு (D) 1, 4 சரி / 2, 3 தவறு

50. தமிழை ஆலென வளர்த்து மாண்புறச் செய்தவர் யார்?

(A) கால்டுவெல் (B) பரிதிமாற் கலைஞர்

(C) மறைமலையடிகள் (D) தேவநேயப் பாவாணர்

51. பாவாணரின் சிறப்புப் பெயர்களில் பொருந்தாததைத் தேர்க

(A) தமிழ்ப் பெருங்காவல் (B) முத்தமிழ் காவலர்

(C) செந்தமிழ் ஞாயிறு (D) மொழி ஞாயிறு

52. "எனக்கு வறுமையும் உண்டு; மனைவி

மக்களும் உண்டு; அவற்றோடு மானமும் உண்டு"

என்ற தன்மானமிக்க உறுதியுரையுடன் தொடர்புடையவர் யார்?

(A) உ.வே.சாமிநாதர் (B) டி.கே.சிதம்பரனார்

(C) தேவநேய பாவாணர் (D) தாரா பாரதி

53. மதுரையில் உலகத்தமிழ் மாநாடு நடைபெற்ற ஆண்டு -----

(A) 05.01.1980 (B) 05.01.1981 (C) 01.05.1980 (D) 01.05.1981

54. வேறுபட்ட ஒன்றைத் தேர்க

(A) கல்வி கேள்வி (B) அழகனோடு சென்றான் (C) தயிர்க்குடம் (D) வாழ்க செந்தமிழ்

55. ஜன்னல் என்பது ----- மொழிப்பதம்

(A) அரபு (B) போர்ச்சுக்கீசியம் (C) உருது (D) வடமொழி

56. வேல்விழி கோடை விடுமுறையைக் ------- ப்புடன் -------க்க விரும்பினாள்

(A) கலி, கழி (B) களி, கழி (C) கலி, களி (D) கழி, களி

57. புழுக்கல், பொம்மல், மூரல், வல்சி என்ற சொற்கள் குறிக்கும் ஒரு பொருள் யாது?

(A) கடல் (B) மரம் (C) சோறு (D) பறவை

58. பொருத்துக

a) நறவம் - 1) குற்றமற்றவர்
b) மதுரம் - 2) தேன்
c) கழுவு துகளர் - 3) கடல்
d) சலதி - 4) இனிமை

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 4 | 1 | 2 | 3 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 2 | 4 | 1 | 3 |

59. அறுசுவை உண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட .... என்ற அடி இடம் பெற்ற நூல்?

(A) நாலடியார் (B) நான்மணிக்கடிகை (C) மூதுரை (D) ஏலாதி

60. பொருத்துக

a) தாயைப்போலப் பிள்ளை நூலைப் போலச் சேலை - 1) அறிவுரை
b) ஆடிப்பட்டம் தேடி விதை - 2) நம்பிக்கை
c) தை பிறந்தால் வழி பிறக்கும் - 3) உறவுமுறை
d) மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்காதே - 4) உழவு

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

61. சரியான சொற்களால் நிரப்புக

உன் வீட்டில் -------- அறைகள் உள்ளன?

நாள்தோறும் விடியற்காலையில் எழுவது என் ----

(A) எத்தனை, வழக்கம் (B) எத்துணை, வழக்கம்

(C) எத்தனை, பழக்கம் (D) எத்துணை, பழக்கம்

62. பின்வருவனவற்றுள் வேறுபட்ட சொல்லைத் தேர்க

(A) விளம்பு (B) மொழி (C) நனி (D) இயம்பு

63. பொருத்துக

a) தமிழியக்கம் - 1) முடியரசன்
b) காவியப்பாவை - 2) கண்ணதாசன்
c) தமிழர் திருமணம் - 3) தேவநேயப் பாவாணர்
d) ஏசு காவியம் - 4) பாரதிதாசன்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 3 | 2 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 2 | 3 | 1 | 4 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

64. கண்ணனுக்கு வேலை கிடைக்கவில்லை, உணவுக்கே தாளம் போடுகின்றான் - இத்தொடரின் மரபுப் பொருளின் பொருள் யாது?

(A) துன்பப்படுதல் (B) ஏமாற்றுதல்

(C) கொடிகட்டிப் பறத்தல் (D) வேலை கிடைத்து விட்டது

65. பின்வருவனவற்றுள் முதல் வேற்றுமைக்கான உதாரணம் தேர்க

(A) கல்வியில் பெரியவர் கம்பர் (B) மரத்தால் செய்தது

(C) அவன் யார்? (D) வீட்டைக் கட்டினான்

66. பொருத்துக

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a) சோழன் பகைவரை அழித்தான் - | 1) ஆக்கல் | | (A) | 2 | 4 | 1 | 3 |
| b) வளவன் பள்ளியைக் கட்டினான் - | 2) நீத்தல் | | (B) | 4 | 1 | 2 | 3 |
| c) குகன் சினத்தை விடுத்தான் - | 3) ஒத்தல் | | (C) | 2 | 1 | 4 | 3 |
| d) கயல்விழி குயிலைப் போன்றவள் - | 4) அழித்தல் | | (D) | 4 | 3 | 2 | 1 |

67. தந்தை பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனைகளைக் கவிதை வடிவில் தந்தவர் யார்?

(A) பாரதிதாசன் (B) கண்ணதாசன் (C) தமிழ்ஒளி (D) முடியரசன்

68. தவறான ஒன்றைத் தேர்க

(A) சிறப்பு + இடம் - சிறப்பிடம் (B) நிழல் + பாவை - நிழற்பாவை

(C) நடிப்பு + கலை - நடிப்புக்கலை (D) பெருமை + ஆசிரியர் - பெரும் ஆசிரியர்

69. "கபிலன் பேசியது" - வழு அறிக

(A) எண் வழு (B) கால வழு (C) திணை வழு (D) பால் வழு

70. வினைமுற்று, பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகிய இவற்றினைப் பயனிலையாகக் கொண்டு முடிவது ------

(A) நான்காம் வேற்றுமை (B) இரண்டாம் வேற்றுமை

(C) முதல் வேற்றுமை (D) ஆறாம் வேற்றுமை

71. வல்லினம் மிகா இடங்களில் சரியானது எது?

1. மூன்றாம் வேற்றுமை விரியில் மிகாது
2. ஏழாம் வேற்றுமைத் தொகையின் பின் மிகாது
3. வியங்கோள் வினைமுற்றில் மிகாது
4. இரண்டாம் வேற்றுமைத் தொகையில் மிகாது

(A) 1, 2, 3 சரி (B) 1, 3, 4 சரி (C) 2, 3 சரி (D) அனைத்தும் சரி

72. பொருத்துக

| | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a) தாது - | 1) மலர் | (A) | 3 | 4 | 2 | 1 |
| b) போது - | 2) வலிமை | (B) | 4 | 2 | 1 | 3 |
| c) திறல் - | 3) வீரர் | (C) | 4 | 1 | 2 | 3 |
| d) மறவர் - | 4) மகரந்தம் | (D) | 3 | 1 | 4 | 2 |

73. கூற்று 1 : ஆங்கிலேயர் சிவகங்கை மீது படையெடுத்த ஆண்டு - 1772

கூற்று 2 : சிவகங்கையை செல்லமுத்து சேதுபதி மீட்ட ஆண்டு - 1780

(A) 1, 2 சரி (B) 1 சரி / 2 தவறு (C) 1, 2 தவறு (D) 1 தவறு / 2 சரி

74. கீழ்க்கண்டவற்றுள் எது சரி?

விளக்கு – இருபொருள்

(A) 1. இலக்கணப் பாடத்தை விளக்கிக் கூறு
2. இளமையில் கல்

(B) 1. விளக்கை அணைத்து விடு
2. கற்களால் ஆனது கோபுரம்

(C) 1. நல்ல நூல்களைப் படி
2. ஆறு கால்களை உடையது ஈ

(D) 1. இலக்கணப் பாடத்தை விளக்கிக் கூறு
2. விளக்கை அணைத்து விடு

75. சந்திப் பிழையற்ற தொடர் எது?

(A) கைவினைக் கலைகளுள் ஒன்றைக் கற்றுக் கொள்வேன்

(B) கைவினைக் கலைகளுள் ஒன்றை கற்று கொள்வேன்

(C) கைவினைக் கலைகளுள் ஒன்றைக் கற்று கொள்வேன்

(D) கைவினைக் கலைகளுள் ஒன்றை கற்றுக் கொள்வேன்

76. பொருத்துக

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a) வேலன் ஊரிலிருந்து வந்தான் - | 1) எழுவாய் வேற்றுமை | | (A) | 2 | 3 | 1 | 4 |
| b) கூலிக்கு வேலை - | 2) 7-ம் வேற்றுமை | | (B) | 3 | 4 | 1 | 2 |
| c) வளவன் என் தம்பி - | 3) 5-ம் வேற்றுமை | | (C) | 4 | 3 | 2 | 1 |
| d) அவனுக்கு என்மேல் வெறுப்பு - | 4) 4-ம் வேற்றுமை | | (D) | 2 | 4 | 1 | 3 |

77. சரியான மரபுச் சொல்லினைத் தேர்க நாணல் --------

(A) தோகை (B) புல் (C) இலை (D) ஓலை

78. உவமையால் விளக்கப் பெறும் பொருத்தமான பொருளை தேர்ந்தெழுதுதல்

"எடுப்பார் கைப்பிள்ளை"

(A) கைக் குழந்தையின் செயல்பாடுகள் (B) யார் எதை சொன்னாலும் கேட்பது

(C) இளமைப் பருவத்து நினைவுகள் (D) பாதுகாப்பின்றி அலைதல்

79. பேச்சு வழக்கு எழுத்து வழக்கு இணைகளில் பொருத்தமற்றது எது / எவை?

1. கோர்த்து – கோத்து 2. நாட்கள் – நாள்கள்

3. மனதில் – மனத்தில் 4. பதற்றம் – பதட்டம்

(A) 1 மட்டும் (B) 2 மட்டும் (C) 3 மட்டும் (D) 4 மட்டும்

80. "ஞானோபதேசம்' நூலின் ஆசிரியர் யார்?

(A) கண்ணதாசன் (B) முடியரசன் (C) வாணிதாசன் (D) வீரமாமுனிவர்

81. சரியான இணையைக் காண்க

(A) தேரா – ஆராய்தல் (B) தொல்லை – துளை (C) தோயும் – தங்கும் (D) நட்டார் – பகைவர்

82. "நரலும்" என்ற சொல்லிற்கான எதிர்ச்சொல் காண்க

(A) ஒலிக்கும் (B) ஒலிக்காது (C) வரிசை (D) வரிசையின்மை

83. பொருத்துக

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a) நிறை | - | 1) சிரிக்கும் | (A) | 2 | 4 | 1 | 3 |
| b) நகும் | - | 2) வெளவால் | (B) | 2 | 1 | 4 | 3 |
| c) நறவம் | - | 3) மேன்மை | (C) | 3 | 1 | 4 | 2 |
| d) துரிஞ்சல் | - | 4) தேன் | (D) | 3 | 4 | 1 | 2 |

84. "துப்பு" என்ற சொல்லின் பொருள் யாது?

(A) பவளம் (B) வலிமை (C) ஆடை (D) கலக்கி

85. தவறான இணையைக் காண்க

(A) தூங்கும் - தொடங்கும் (B) துவரை - பவளம்

(C) தூவல் - இறகு (D) தென்னம் பொருப்பு - பொதிகைமலை

86. 'தேறல்' என்ற சொல்லின் பொருள் யாது?

(A) தெளிவு (B) தேன் (C) தொடும் (D) குற்றம்

87. 'நகல்' என்ற சொல்லிற்கு பொருந்தாத சொல்லைக் கண்டுபிடி

(A) அச்சு (B) பிரதி (C) மகிழ்ச்சி (D) ஏளனம்

88. கூற்று 1: 'நவரசம்' என்பது 9 வகையான உணர்ச்சிகளை குறிக்கும்

கூற்று 2: இதில் 'இழிவு, சிரிப்பு, வியப்பு, அவலம்' போன்றவையும் அடங்கும்

(A) கூற்று 1 சரி (B) கூற்று 2 சரி (C) இரண்டும் சரி (D) இரண்டும் தவறு

89. கூற்று 1 : 'நிறை' என்ற சொல் 'ஆவினத்தைக் குறிக்கும்'

கூற்று 2 : 'நிரை' என்ற சொல் 'மன அடக்கம்' என்பதைக் குறிக்கும்

(A) கூற்று 1 சரி (B) கூற்று 2 சரி (C) இரண்டும் சரி (D) இரண்டும் தவறு

90. தவறான இணையைக் காண்க

1. நந்து - சங்கு 2. நயம் - நிதி 3. நடலை - இன்பம்

4. நறை - தேன் 5. தொய்வு - தளர்ச்சி 6. துலை - வளை

(A) 1, 3, 5 தவறு (B) 2, 3, 6 தவறு (C) 2, 4, 6 தவறு (D) 1, 4, 5 தவறு

91. " Cataracts " என்ற ஆங்கிலச் சொல்லிற்கு இணையான தமிழ்ச்சொல் காண்க

(A) சிறு அருவி (B) பவளப்பாறை

(C) சுண்ணாம்பு பாறை (D) பாலைவனம்

92. "Promulgate" என்ற ஆங்கிலச் சொல்லிற்கு இணையான தமிழ்ச்சொல் காண்க

(A) தள்ளிவை (B) பிரகடனம் (C) சட்டமன்றம் (D) மேலவை

93. தவறான இணையைக் காண்க

(A) Immigration - குடியேற்றம் (B) Immigrant -குடியேறுபவர்

(C) Emigration - குடிப்பெயர்தல் (D) Emigrant -இடம் பெயர்பவர்

94. பொருத்துக

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a) Flood | - | 1) வறட்சி | (A) | 3 | 4 | 1 | 2 |
| b) Drought | - | 2) பவளப்பாறை | (B) | 3 | 1 | 4 | 2 |
| c) Gulf | - | 3) வெள்ளப்பெருக்கு | (C) | 4 | 2 | 1 | 3 |
| d) Reef | - | 4) வளைகுடா | (D) | 4 | 1 | 2 | 3 |

95. “Coincidence” என்ற ஆங்கிலச் சொல்லிற்கு இணையான தமிழ்ச்சொல் காண்க

(A) ஒரு மனதாக முடிவெடுத்தல் (B) பாதிக்கக்கூடிய

(C) தற்செயல் (D) உறுதிப்படுத்து

96. சரியான இணையைக் காண்க

(A) Frontier - முன்னிருப்பவர் (B) Panic - ஆபத்து

(C) Emphasized - சொல்வன்மை (D) Fair trial - இரட்டை வழக்கு

97. “Insolation” என்ற ஆங்கிலச் சொல்லிற்கு இணையான தமிழ்ச்சொல் காண்க

(A) நீர் ஊடுருவல் (B) சூரியக்கதிர் வீசல் (C) ஆவிசுருங்குதல் (D) கதிர்வீச்சல்

98. “Emancipation” என்ற ஆங்கிலச் சொல்லிற்கு இணையான தமிழ்ச்சொல் காண்க

(A) அறிவொளி (B) அறிவாளி (C) சீர்திருத்தவாதி (D) விடுதலை

99. தவறான இணையைக் காண்க

(A) Debenture - கடனீட்டுப் பத்திரம் (B) Diversity - பன்முகத்தன்மை

(C) Infantry - விமானப்படை (D) Predominantly - முக்கியமாக

100. பொருத்துக

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a) Betrayed | - | 1) இரட்டையாட்சி | (A) | 3 | 1 | 4 | 2 |
| b) Dyarchy | - | 2) ஆக்கிரமிப்பு | (B) | 3 | 4 | 1 | 2 |
| c) Propagate | - | 3) காட்டிக்கொடு | (C) | 2 | 1 | 4 | 3 |
| d) Encoachment | - | 4) பரவச்செய் | (D) | 2 | 4 | 1 | 3 |